சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 08.07.2026
ம.சா.1 – மலைச்செல்வி, க.பெ. அழகர்சாமி (லேட்)
MCOP No.13/2025
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

விபத்தை நான் நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு அருகில் உள்ள மாதேஷ் என்பவர்தான் விபத்தை பற்றி என்னிடம் கூறினார். விபத்தின்போது என் கணவர் இருசக்கரவாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்து சென்றார் என்றால் சரிதான். விபத்தின் போது 2 நபர்கள் பின்னிருக்கையில் அமர்ந்து சென்றார்கள் என்றால் சரிதான். விபத்தில் என் கணவர் சென்ற இருசக்கரவாகனத்தின் ஓட்டுநரான நாகபிரபு என்பவருக்கு இருச்சக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் தெரியாது. விபத்தில் இறந்து போன என் கணவர் இருசக்கரவாகனத்தில் 3வது ஆளாக பின்னிருக்கையில் அமர்ந்துசென்றுள்ளதால் அவருக்கு காப்பீடு வழங்க இயலாது என்றும் காப்பீடு விதி மீறல்களும் ஏற்பட்டுள்ளன என்றும் மேலும் 3ம் தரப்பினருக்கு தான் காப்பீடு உள்ளதே தவிர வாகனத்தில் பயணித்த நபருக்கு காப்பீடு பொருந்தாது என்றால் சரியல்ல. என் கணவர் கட்டிட வேலை செய்து ரூ.36000 ஈட்டிவந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். பல்வேறு தலைப்பின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மிகைப்படுத்தப்பட்ட கோரப்பட்டுள்ளது என்றும் அதனால் கோரியுள்ளஇழப்பீடு தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை விபத்தின் போது சட்ட விதிகளுக்குட்பட்டு ஓட்டாமல் 3நபர்கள் இருசக்கர வாகனத்தில் பயணித்தார்கள் என்றும் ஓட்டுநர் நாகபிரவுக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் 2வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுப்பதில்

இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளார் என்றும் வாகனத்தின் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க இயலும் என்றால் சரியல்ல. மேலும் 1ம்எதிர்மனுதாரர் வாகனமான TN 59 DZ 3051 இருசக்கர வாகனத்திற்கு 3ம் நபர்களுக்கு மட்டுமே காப்பீடு கொடுக்க இயலும் என்றும் அதில் பயணித்த என் கணவருக்கு காப்பீடு வழங்க இயலாது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கபடுகிறது.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.07.08 20:23:23 +0530

Sub Judge,
Melur